**திருநெல்வேலி மாநகராட்சி**

**2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

1) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நயினார்குளம் அமைந்துள்ள (தெற்கு) பகுதிகளில் மேம்படுத்தும் பணிகள் செய்தல் பணிக்கு ரூ.11.03 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 14 வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.4ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3- நாள் 29.01.2021ல் ரூ.11.03 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர் (FAC), நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 1473/2020/DO2 நாள் 02.02.2021ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 09/2020-21/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினகரன் தமிழ் நாளிதழில் 28.01.2021 அன்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 04.02.2021லும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 25.02.2021 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் (1) M/s.GV Constructions, Namakkal மற்றும் (2) M/s.Smart Infratech Developers, Erode ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 26.02.2021 -ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் M/s.GV Constructions, Namakkal ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்ப்நதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 26.02.2021 ன்படி M/s.GV Constructions, Namakkal ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 26.02.2021 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நயினார்குளம் அமைந்துள்ள (தெற்கு) பகுதிகளில் மேம்படுத்தும் பணிகள் செய்தல் | ரூ.10,32,87,638 /- | ரூ.11,23,70,718/- |
| | | | 8.79% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.11,23,70,718/- ஆனது மதிப்பீட்டை விட 8.79% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 26.02.2021 அன்று தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 26.02.2021-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 8.79% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95%

(ரூ.10,84,00,361/-) அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியினை செய்ய சம்மதம் தெரிவித்தும் தற்போது பணிக்கு தேவையான பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 26.02.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.10,84,00,361/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நயினார்குளம் அமைந்துள்ள (தெற்கு) பகுதிகளில் மேம்படுத்தும் பணிகள் அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 26.02.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.10,84,00,361/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1103.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 259:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 9/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2020-21/SCM)

---

2) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் வடபுறத்தில் அடுக்குமாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைத்தல் (பகுதி - 1) பணிக்கு ரூ.13.73 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 14 வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.2ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3 நாள் 29.01.2021ல் ரூ.13.73 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர் (FAC), நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1473/2020/DO2 நாள் 02.02.2021ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 09/2020-21/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினகரன் தமிழ் நாளிதழில் 28.01.2021 அன்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 04.02.2021லும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 25.02.2021 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் (1) M/s.Sri Naachimaar Engineering Constructions, Namakkal மற்றும் (2) M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம்

இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 26.02.2021ம் தேதியன்று ஒப்ப்நதப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 26.02.2021-ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Sri Naachimaar Engineering Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர். எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் வடபுறத்தில் அடுக்குமாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைத்தல் (பகுதி - 1) | ரூ.13,09,44,323/- | ரூ.14,60,40,562/- | ரூ.13,77,50,931/- |
| | | | 11.53% மதிப்பீட்டை விட அதிகம் | 5.20% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.13,77,50,931/- ஆனது மதிப்பீட்டை விட 5.20% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 26.02.2021 அன்று தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 26.02.2021-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 5.08% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான (ரூ.13,74,28,442/-) விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டு தற்போது பணிக்கு தேவையான பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 26.02.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram ஒப்பந்த நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.13,74,28,442/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் வடபுறத்தில் அடுக்குமாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைத்தல் (பகுதி - 1) பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 26.02.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram ஒப்பந்த நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.13,74,28,442/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1373.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 260:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 9/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2020-21/SCM)

---

3) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் மேற்கு புறத்தில் அடுக்குமாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைத்தல் (பகுதி - 2) பணிக்கு ரூ.9.41 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 14 வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.3ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3 நாள் 29.01.2021ல் ரூ.9.41 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர் (FAC), நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1473/2020/DO2 நாள் 02.02.2021ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 09/2020-21/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினகரன் தமிழ் நாளிதழில் 28.01.2021 அன்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 04.02.2021லும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 25.02.2021 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் (1) M/s.Sri Naachimaar Engineering Constructions, Namakkal மற்றும் (2) M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 26.02.2021ம் தேதியன்று ஒப்பநதப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 26.02.2021-ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Sri Naachimaar Engineering Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் மேற்குபுறத்தில் அடுக்குமாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைத்தல் (பகுதி - 2) | ரூ.8,93,57,504/- | ரூ.9,74,02,040/- | ரூ.9,39,03,993/- |
| | | | 9.00% மதிப்பீட்டை விட அதிகம் | 5.09% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.9,39,03,993/- ஆனது மதிப்பீட்டை விட 5.09% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 26.02.2021 அன்று தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 26.02.2021-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 5.09% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான (ரூ.9,37,82,585/-) விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டு தற்போது பணிக்கு தேவையான பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 26.02.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram ஒப்பந்த நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.9,37,82,585/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர் புதிய பேருந்து நிலையத்தின் மேற்குபுறத்தில் அடுக்குமாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைத்தல் (பகுதி - 2) பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 26.02.2021-ம் தேதிய

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram ஒப்பந்த நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.9,37,82,585/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.941.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 261:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 9/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2020-21/SCM)

---

4) திருநெல்வேலி மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ், விடுபட்ட பகுதிகளான வார்டு எண்.1 முதல் 7 வரை, வார்டு எண்.38 (பகுதி), வார்டு எண்.39 முதல் 55 வரையுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை ரூ.289.01 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றுவதற்கு அரசாணை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.10.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலக ந.க.எண்.18281/2017/DO1 நாள் 14.11.2017ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு ஆசிய மேம்பாட்டு வங்கியில் இருந்து தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் மூலமாக 19.11.2017ல் தடையின்மை சான்று பெறப்பட்டதின்படியும் 5.1.2018ல் மூடி முத்திரையிடப்பட்ட இருஉறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நிர்வாக காரணங்களால் மேற்படி தேதியில் பெறப்பட இருந்த ஒப்பந்தப்புள்ளிகள் 31.1.2018 வரை பெறப்படும் என கால நீட்டிப்பு செய்யப்பட்டு அவ்வாறே 31.1.2018ல் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

அவற்றுள் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Larsen & Toubro Construction Limited, Chennai நிறுவனத்தின் இறுதிகட்ட விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் துறை மதிப்பீட்டில் இருந்து 12.00 சதவீதம் அதிகமான ஒப்பந்தப்புள்ளியை (தொகை ரூ.291.81 கோடி) மாமன்றத் தீர்மானம் எண்.31 நாள் 4.6.2018ல் ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு 25.07.2018 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு, வேலை ஆணை வழங்கப்பட்ட 36 மாத காலத்திற்குள் மேற்படி திட்டப்பணியை முடிக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

தற்போது மேற்படி திட்டப்பணியில் ஜனவரி 2021 வரையிலான காலத்திற்கு 86.11 சதவிகிதம் திட்டப்பணி முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற நிலையில் பல்வேறு காரணங்களினால் 54.5 சதவிகித பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட திட்டப்பணி நடைபெறும் பொழுது அளவுகளை கணக்கீடு செய்து அவ்வாறு கூடுதலாக வரும் அளவுகளையும் அவற்றிற்கான தொகையினையும் கணக்கீடு செய்யப்பட்டுள்ள விபரம் கீழ்க்கண்டவாறு :- (இணைப்பு 1ல் கண்டவாறு)

<u>அக்டோபர் 2020 வரையிலான காலத்திற்கு</u>

- மதிப்பீட்டின்படி உள்ள தொகை :. ரூ.2,21,57,184/-
- அக்டோபர் 2020 வரை செய்து முடிக்கப்பட்டது : ரூ.3,62,00,627/-
- திட்டப்பணி நடைபெறும் போது மதிப்பீட்டை விட கூடுதலாகும் அளவுக்கான தொகை : ரூ.1,40,43,443/-

(1) மேற்கண்ட கணக்கீட்டின்படி திட்டப்பணி நடைபெறும் போது அக்டோபர் 2020 வரையிலான மதிப்பீட்டில் உள்ள இனங்களின் அளவுகளை விட கூடுதலாகும் அளவுக்கான தொகை ரூ.1,40,43,443/-ல் மாநகராட்சி கூட்டத் தீர்மான எண் 130 நாள் 17.09.2020 ல் ரூ.83,49,548/-. க்கு மாமன்ற அனுமதி பெற்றுள்ளதால் மீதம் உள்ள தொகை ரூ.56,93,895/-க்கு மாமன்ற அனுமதிக்கும் (இணைப்பு 1ல் கண்டவாறு)

(2) மேற்படி திட்டப்பணியில் மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்கள் பணித்தளத்தில் அவசியமாக மேற்கொள்ளப்பட்டதாலும் இத்திட்டப்பணி நடைபெறும் பொழுது அக்டோபர் 2020 வரையிலான அளவுகளுக்கான தொகை ரூ.11,08,64,371/- ல் மாநகராட்சி கூட்டத் தீர்மான எண் 130 நாள் 17.09.2020 ல் ரூ.5,70,73,226/- க்கு மாமன்ற அனுமதி பெற்றுள்ளதால் மீதம் உள்ள தொகை ரூ.5,37,91,145/-க்கு மாமன்ற அனுமதிக்கும் (இணைப்பு -2ல் கண்டவாறு).

(3) மேற்படி மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்களுக்கு தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படியும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படி விலை விகிதத்தை கணக்கீடு செய்து மாமன்ற அனுமதி பெற்று முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறும் பொருட்டு மாமன்ற அனுமதியுடன் பரிந்துரை செய்ய மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, அம்ரூத் திட்டத்தின் கீழ், விடுபட்ட பகுதிகளான வார்டு எண்.1 முதல் 7 வரை, வார்டு எண்.38 (பகுதி), வார்டு எண்.39 முதல் 55 வரையுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி திட்டப்பணியில், மதிப்பீட்டில் உள்ள இனங்களில் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட திட்டப்பணி நடைபெறும் பொழுது அளவுகளை கணக்கீடு செய்து அவ்வாறு கூடுதலாக வரும் அளவுகளையும் அவற்றிற்கான தொகையினையும் கணக்கீடு செய்து

(1) மதிப்பீட்டில் உள்ள இனங்களின் அளவுகளை விட கூடுதலாகும் அளவுக்கான தொகை ரூ.1,40,43,443/-ல் மாநகராட்சி கூட்டத் தீர்மான எண் 130, நாள் 17.09.2020 ல் ரூ.83,49,548/-க்கு மாமன்ற அனுமதி பெற்றுள்ளதால் மீதம் உள்ள தொகை ரூ.56,93,895/-க்கு மாமன்ற அனுமதி வழங்கவும் (இணைப்பு 1ல் கண்டவாறு)

(2) மேற்படி திட்டப்பணியில் மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்கள் பணித்தளத்தில் அவசியமாக மேற்கொள்ளப்பட்டதாலும் இத்திட்டப்பணி நடைபெறும் போது அக்டோபர் 2020 வரையிலான அளவுகளுக்கும் அதற்கான தொகை ரூ.11,08,64,371/-ல் மாநகராட்சி கூட்டத் தீர்மான எண் 130 நாள் 17.09.2020 ல் ரூ.5,70,73,226/-க்கு மாமன்ற அனுமதி பெற்றுள்ளதால் மீதம் உள்ள தொகை ரூ.5,37,91,145/-க்கு மாமன்ற அனுமதி வழங்கவும் (இணைப்பு 2ல் கண்டவாறு).

(3) மேற்படி மூலமதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்களுக்கு தமிழ்நாடு பொதுப்பணித் துறையால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படி அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படி விலைவிகிதத்தை கணக்கீடு செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி பெற்று முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 262:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ3/1473/2015)

5) திருநெல்வேலி மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ், விடுபட்ட பகுதிகளான வார்டு எண்.1 முதல் 7 வரை, வார்டு எண்.38 (பகுதி), வார்டு எண்.39 முதல் 55 வரையுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை ரூ.289.01 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றுவதற்கு அரசாணை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.10.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, M/s Larsen & Toubro Construction Limited, Chennai நிறுவனத்திற்கு மாமன்றத் தீர்மானம் எண் 31, நாள் 04.06.2018-ல் ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு 25.07.20218 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு, வேலை ஆணை வழங்கப்பட்ட 36 மாத காலத்திற்குள் மேற்படி திட்டப்பணியை முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி நடைபெற்று வருகிறது.

தற்போது மேற்படி திட்டப்பணியில் அக்டோபர் 2020 வரையிலான காலத்திற்கு 49.4 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி விரிவான திட்ட அறிக்கையில் நயினார்குளம் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாக்கடை திட்ட கழிவு நீரேற்று நிலைய வளாகத்திலேயே புதிய பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் கழிவு நீரேற்று நிலையம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் திருநெல்வேலி மண்டலப் பகுதியில் அமைந்துள்ள நயினார்குளம் பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையத்தின் D.G. அறை மற்றும் உலர்ந்த கிணறுகளை (D.G.Room and Dry wells) ஒப்பந்தக்காரர் அகற்றித் தர கோரியதின் அடிப்படையிலும், கட்டுமான மேலாண்மை மற்றும் மேற்பார்வை ஆலோசனை குழுத்தலைவர் (CMSC-1) அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும் மேற்படி நயினார்குளம் கழிவு நீரேற்று நிலையத்தின் D.G. அறை மற்றும் உலர்ந்த கிணறுகளை அகற்றுவது பற்றி முடிவு செய்ய ஆணையாளர் அவர்களால் 09.10.2020-ல் வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. மேற்படி குழு நயினார்குளம் கழிவு நீரேற்று நிலையத்தினை ஆய்வு செய்து 14.10.2020-ல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி அறிக்கையில் நயினார்குளம் பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையத்தில் நிலையில் உள்ள D.G. அறை மற்றும் உலர்ந்த கிணறுகளை மாநகராட்சி மூலம் அகற்றலாம் எனவும் அகற்றிய இடத்தில் புதிய கழிவு நீரேற்று நிலையம் கட்டப்பட வேண்டும் எனவும் மற்றும் ஏற்கனவே பழைய திட்டத்தின் மூலம் இயங்கும் பம்பிங் மெயினை திட்டப்பணிக்கு பாதிப்பு இல்லாத வகையில் மாற்றுப் பாதையில் மாநகராட்சி மூலம் அமைக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவுக்கும்.

அலுவலகக் குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி அம்ரூத் திட்டத்தின் கீழ், விடுபட்ட பகதிகளான வார்டு எண் 1 முதல் 7 வரை, வார்டு எண் 38 (பகுதி), வார்டு எண் 39 முதல் 55 வரையுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி விரிவான திட்ட அறிக்கையில் நயினார்குளம் பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாக்கடைத் திட்ட பழிவு நீரேற்று நிலைய வாளகத்திலேயே புதிய பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் கழிவு நீரேற்று நிலையம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், திருநெல்வேலி மண்டலப் பகுதியில் அமைந்துள்ள நியனார்குளம் பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையத்தின் D.G.அறை மற்றும் உலர்ந்த கிணறுகளை (D.G.Room and Dry wells) ஒப்பந்தக்காரர் அகற்றித் தர கோரியதின் அடிப்படையிலும், கட்டுமான மேலாண்மை மற்றும் மேற்பார்வை ஆலோசனை குழுத்தலைவர் (CMSC-1) அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும் மேற்படி நயினார்குளம் கழிவு நீரேற்று நிலையத்தின் D.G. அறை மற்றும் உலர்ந்த கிணறுகளை அகற்ற வல்லுநர் குழு அறிக்கையின்படி நயினார்குளம் பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையத்தில் நிலையில் உள்ள D.G.அறை மற்றும் உலர்ந்த கிணறுகளை மாநகராட்சி மூலம் அகற்றலாம் எனவும் அகற்றிய இடத்தில் புதிய கழிவு நீரேற்று நிலையம் கட்டப்பட வேண்டும் எனவும் மற்றும் எற்கனவே பழைய திட்டத்தின் மூலம் இயங்கம் பம்பிங் மெயினை திட்டப்பணிக்கு பாதிப்பு இல்லாத வகையில் மாற்றுப் பாதையில் மாநகராட்சி மூலம் அமைக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 263:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ3/1473/20215)